1970 மார்ச் 21]

திரு. கே. என். குமாரசாமி: மஞ்சள் காமாலை வருகிறபோது, ஜெனரல் ஆஸ்பத்திரியில் சரியானமுறையில் ட்ரீட்மென்ட் இல்லாத தால், வசதி படைத்தவர்கள் ஸ்பெஷல் ட்ரீட்மென்ட் எடுத்துக் கொள்ள ஸ்பெஷல் டாக்டர்களிடம் போகிறார்கள். ஆனால், ஏழைகள் அவ்வாறு போகமுடியாமல் மிகவும் பாதிக்கப்படுவதால், ஜெனரல் ஆஸ்பத்திரியில் இதற்கு ஸ்பெஷல் ட்ரீட்மென்ட் கொடுப்ப தற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நோய் தீவிரமாகப் பரவியிருந்த நேரத்தில் இதற்கு முக்கியத் துவம் தந்து, இதனால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வேண் டியது முக்கிய பொறுப்பாக இருந்ததால், அதற்கான வசதிகள் செய்து தருமாறு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக் கெல்லாம் ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுகின்ற அபாயம் இருப்பதால் இதைத்தவிர்ப்பதற்கு வசதி செய்து தரவேண்டும் என்ற குறிப்பு இருக்கிறது. தீவிரமாகப் பரவிய நேரத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் வீச்சு நிலையம்.

* 471 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்ரே நிலையம் அமைக்க திட்டமிருந்தும் நிறை வேற்றப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(இ) ஆம் எனின், அதற்கான இடையூறுகளை நீக்கி துரிதமாக எக்ஸ்ரே நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) : திரு மங்கலம் அரசு மருத்துவ மனையில் எக்ஸ் கதிர்வீச்சு நிலையம் ஒன்று ரூ. 37,000 செலவில் கட்டும் திட்டம் 1970-71 நிதியாண்டுக்காக பரி சீலிக்கப்பட்டு நிதி நிலைக் காரணத்தால் ஒத்திப் போடப் பட்டுள்ளது.

National Cadet Corps

* 472. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether syllabus for National Cadet Corps training in our State would be orientated; and

(*b*) whether the revised syllabus would be diversified?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) : தேசிய மாணவர் படையின் பயிற்சித் திட்டத்தை மாற்றி அமைக்கும் யோசனை எதுவும் இப்பொழுது இல்லை.